கன்னியர் கண்கள் சொல்லும் கவிதை எல்லாம் காவியம்-நெஞ்சில் எழுதிய வண்ணம் குலையாத ஓவியம்



Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

22-03-2024



கண்கள் சொல்லும் கவிதை



கண்களா இவை
காதல்மொழி பேசும் கயல்கள்
விழிகளா இவை
காதல் “கள்” சுரக்கும்
தேன் மலர்கள்







விழிகளா இவை
என்னை வீழ்த்திடும்
காமன் கணைகள்
கல் நெஞ்சிலும்
காதலைச் செதுக்கும்
வேல்கள்





கண்களா இவை
பார்வையாலே
என்னை தொட்டுத்
தழுவிடும்
காதல் தென்றல்
கவிதை சொல்லும்
பட்டாம் பூச்சிகள்



பட்டாம் பூச்சி இமைகள்

முடித் திறந்திட மனம்

கெஞ்சுவதோ காதல் வரம்

இவள் ஒரு பார்வையால்

என் நெஞ்சில்

பற்றிக்கொண்டதோ

காதல் சுரம்








விழிகளா இவை
வெண்வானில்
உலா வரும்
கரு நிலாக்கள்-
என்
இதயம் காணும்
காதல் கனாக்கள்



கண்களா இவை –காதல் தேன்
சொரியும் குவளைப் பூக்கள்
விழிகளா இவை –
காதல் சுரங்கத்தின்
பூங்கதவுகள்



என்னை நீ பார்த்தபோது-
என் கண்களுக்குள் நீயும்
உன் கண்களுக்கள் நானும்
இடம்மாறிப்போன
அதிசயம்தான்
காதலால் கண்கள்
செய்யும் மாயமோ?







பார்த்தேன் இரசித்தேன்
பார்வையால் கட்டுண்டு கிடக்க
சுந்தரி இவள் விழிகள்
காதல் வலை பின்னும்
மந்திரச் சிலந்திகளோ?





கன்னியர் கயல்விழிகள்
போடும்
காதல் தூண்டிலில்
சிக்குண்ட சிறு மீன்களாய்
ஆண் மனங்கள்..





நிலவிலும் இல்லாத
நீர்க்குளத்தில்
நீந்திடும் இரு கயல்களாய்
உன் நிலா முகத்தில்
இரு விழிகளடி-காதல் நீராட
என் மனம் துடிக்குதடி





மூடிய இவள் விழிகள்
மெல்லத் திறந்தபோது
முத்துச்சிப்பி கண்விழித்த
அழகுக்கோலம்





காதல் சொல்ல
மொழிகள் எதற்கு
கயல் விழிகள்
பேசும்போது.










பூ விழியாள்
காதல் வலையில்
சிக்குண்ட
புள்ளிமான்களாய்
ஆண்கள்





மையெழுதிய இவள்
விழிகளில்
மனம் தேன் தும்பிபோல்
மொய்த்துக் கிடக்க
கள்வடியும் பூக்களா இவை-
இல்லை-காதல்
தேன் சுரக்கும் மலர்கள்.



காதல் மகரந்தத்தை-
காளையர்
நெஞ்சில் தூவும்
வண்ண மலர்களோ
இவள்
வாடாத பூ விழிகள்.





வில்லைக்குள்

தெரிந்தது

விழிகளல்ல, வேல்கள்

வீழ்ந்தவை

மான்களைல்ல,

ஆண் மனங்கள







யார் வைத்தார் இவள்
விழிகளுக்குள்
காளை மனதை
கவர்ந்திழுக்கும்
அதிசயக்
காதல் புலத்தை





விலகிப்போக நினைத்தாலும்,
விட்டுப் பிரிய முனைந்தாலும்,
ஓடி ஒளிய முனைந்தாலும்,
விட்டுப் பிரியாத ஈர்ப்பு விசையாய்
என்னைத் தழுவி ஈர்க்கும்
காதல் காந்தப் புலமாய்
உன் விழிகளடி?






வேல்விழியாள்
காதல் நோய் தந்து
பூவிழியாள்
என்னைத்தேற்றும்
காமன் மகள்–என்
காதலியாள்
இவள்தானோ?





விழிகள் சந்தித்தபோது
மொழிகள் இன்றி
நெஞ்சில்
காதல் தீ மூட்டும்
இவள் விழிகள்
காதல்
சக்கி முக்கி கந்களா?
.






கண் பார்த்து
நெஞ்செழுதும்
காவியமாய்க் காதல்
என் விழிகள் இதயத்தில்
வரையும்
அழியாத ஓவியமாய்
கன்னி மகள்








மண்ணில் எழுதிய காதலை-
அலைகள் அழித்ததடி
விண்ணில் எழுதிய காதல்
மழையில் கரைந்ததடி
மலர்களில் எழுதிய காதல் ஓர்
மாலைக்குள் உதிர்ந்ததடி-
பெண்ணே
உன் கண்களுக்குள் .
கண்களால் எழுதிய காதல்
நெஞ்சுக்குள் விழுந்து
காலமெல்லாம் நிலைத்ததடி





உலகின் முதல் மொழி
கண்களால் பேசிய காதலடி
எந்நாளும் வாழும் கவிதையடி
எழுத்தும், ஓசையுமில்லாத மொழி
இரு இதயங்கள் பேசிட இன்றும்
இனம், மதம் கடந்த தேவராகமடி



மையெழுதிய விழிகள் என்னை மயக்க
நெய்யெழுதிய குழலில் மல்லிகை சிரிக்க
கண் பார்த்து நெஞ்செழுதிய
காதல் ஓவியம்
கனவிலும், நினைவிலும்
நான் படிக்கும்
காதல் காவியம்
நீதானடி பெண்ணே







கண்டு மலர்வதும் கண்கள்தான்
காணாமல் கண்ணீர் சிந்துவதும்
கண்கள்தான்
கண் பார்க்க, மண் பார்த்து
நாணுவதும் கண்கள்தான்
இதயம் அறிய
ஓசையின்றிப் பேசுவதும்
கண்கள்தான்
தூரிகையும், வண்ணமமின்றி-
மையெழுதிய விழிகள், மையலால்
நெஞ்சில் வரைவதும்-அழியாத
காதல் ஓவியம்தான்



அழகைக் காண விழிகள்
வேண்டும்
அழகைப் பருக விழி “ கள்”
வேண்டும்-உன்னைக்
கண்டபின் நெஞ்சில்
காதல் போதையடி
மாதல்ல நீ
காதல் மதுவடி



